பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
25.08.2025 7 15
திங்கட்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி குஜராத்தில் சுமார் 5 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.

2. தற்கால சவால்களுக்குத் தீர்வு காண இளையோருக்கு அதிகாரம் அளிப்பது குறித்து காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா தெரிவித்துள்ளார்.

3. ஆன்லைன் விளையாட்டுகளால் நாட்டு மக்கள் பெருமளவு பணத்தை இழந்து வந்ததை தடுக்கவே புதிய ஆன்லைன் விளையாட்டு சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. பாகிஸ்தானில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த சிறுமிகள் கட்டாய மதமாற்றத்திற்கு ஆளாக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

5. உலக இளையோர் வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி குஜராத் மாநிலத்தில் சுமார் 5 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.

இரண்டு நாள் பயணமாக அகமதாபாத் செல்லும் அவர், அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் உரையாற்றுகிறார்.

நாளை கலப்பு பேட்டரி எலக்ட்ரோட் தயாரிப்பு தொழிற்சாலை மற்றும் 100 நாடுகளுக்கு மின்சார வாகனங்கள் ஏற்றுமதியை அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

மேலும் ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வே திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணிக்கும் பிரதமர், Ahmedabad - Palanpur நெடுஞ்சாலையில் 6 வழிச் சுரங்கப்பாதை மற்றும் Ahmedabad - Viramgam சாலையில் ரயில்வே மேம்பாலத்திற்கும் அடிக்கல் நாட்ட உள்ளார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் ஏற்பட்ட பெருமழையால் பாதிக்கப்பட்டு ஜம்மு மருத்துவமனையில் சிசிச்சை பெற்று வருபவர்களை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் நேரில் சந்தித்து அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார்.

மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங்குடன் ஜம்மு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் சென்ற திரு. ராஜ்நாத் சிங், வெள்ளப்பெருக்கில் சிக்கி காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையும் வகையில் சிறப்பு சிகிச்சைகளை அளிக்குமாறு மருத்துவர்களிடம் அறிவுறுத்தினார்.

ஜம்மு-கஷ்மீரில் வெள்ளப்பெருக்கால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி மிகுந்த கவலை அடைந்துள்ளதாகவும், தற்போதைய நிலவரத்தை பிரதமர் நேரடியாக கண்காணித்து வருவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தற்கால சவால்களுக்குத் தீர்வு காண இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பது குறித்து காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா தெரிவித்துள்ளார்.

இந்த மாநாடு தொடர்பாக புதுதில்லியில் நடைபெற்ற பல்துறை அமைச்சர்கள் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பார்படாஸ் நாட்டின் பிரிட்ஜ்டவுனில் அக்டோபர் மாதம் 5ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை இம்மாநாடு நடைபெற உள்ளதாக கூறினார்.

இதில் மாநிலங்களவைத் துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஷ் சிங் மற்றும் 29 மாநிலங்கள், யூனியன்பிரதேசங்களைச் சேர்ந்த சட்டப்பேரவைத் தலைவர்கள், பேரவைச் செயலாளர்கள் கலந்துகொள்ள இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெறும் வட்டமேஜை ஆலோசனையில் குழு வன்முறை முதல் இணைய குற்றங்கள் வரையிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து விவாதிக்கப்பட உள்ளதாகவும் திரு. ஓம்பிர்லா தெரிவித்தார்.

<<<<>>>>

*பிரதமர் திரு. நரேந்திர மோடி Fiji பிரதமர் திரு. Sitiveni Rabuka-வை இன்று சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.*

*இந்தியாவில் 3 நாள் அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ள ஃபிஜி பிரதமர், குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவையும் சந்தித்துப் பேச உள்ளார்.*

*முன்னதாக நேற்று மாலை ஃபிஜி பிரதமரை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா சந்தித்துப் பேசினார்.*

*திரு. Sitiveni Rabuka-வின் இந்தப் பயணம் இரு நாடுகளுக்கு இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவதாக அமையும் என்று வெளியுறவுத்துறை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

**<<<<>>>>**

*2047ஆம் ஆண்டுக்குள் விளையாட்டுத் துறையில் உலகின் 5 முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.*

*அகமதாபாதில் காமன்வெல்த் பளுதூக்கும் சாம்பியன் போட்டியின் தொடக்க விழாவில் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட பல்வேறு சீர்திருத்தங்கள் வாயிலாக விளையாட்டுத் துறை தற்போது முன்னணியில் உள்ளதாக தெரிவித்தார்.*

*2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.*

*புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள தேசிய விளையாட்டு நிர்வாக சட்டத்தில், விளையாட்டு கூட்டமைப்புகளில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வகை செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.*

**<<<<>>>>**

*பணம் வைத்து விளையாடும் ஆன்லைன் விளையாட்டுகளால் நாட்டு மக்கள் ஆண்டுதோறும் 20 ஆயிரம் கோடி ரூபாயை இழந்து வந்ததை தடுக்கவே புதிய ஆன்லைன் விளையாட்டு சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*ஆய்வறிக்கை ஒன்றின்படி சுமார் 45 கோடி மக்கள் இத்தகைய விளையாட்டுகளால் பணத்தை இழந்து வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*புதிய சட்டத்தின்படி இதுபோன்ற பண இழப்புகளை தடுத்து மின்னணு விளையாட்டுகளை ஊக்குவிக்க வகை செய்யப்பட்டிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.*

*கர்நாடக மாநிலத்தில் மட்டும் கடந்த 3 ஆண்டுகளில் ஆன்லைன் விளையாட்டுகள் மூலம் பணத்தை இழந்த 18 பேர் தற்கொலை செய்துகொண்டதும் ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*

**<<<<>>>>**

*பாகிஸ்தானில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த இந்து மற்றும் கிறிஸ்தவ சிறுமிகள் கட்டாய மதமாற்றத்திற்கு ஆளாக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.*

*அந்நாட்டின் பஞ்சாப் மாகாணத்திற்கு உட்பட்ட Muridke பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுமி இரண்டு ஆண்டுகளாக சட்டவிரோதமாக பிடித்து வைக்கப்பட்டு கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டு பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான நிலையில் கடந்த ஜூன் மாதம் அவர் தப்பி வந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதேபோன்று சிந்து மாகாணத்திற்கு உட்பட்ட இந்து மத சிறுவர், சிறுமியர் 4 பேர் மதமாற்றத்திற்காக கடத்தப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*பாகிஸ்தானில் ஆண்டுதோறும் 12 முதல் 25 வயதுக்குட்பட்ட இந்து மற்றும் கிறித்தவ மதத்தைச் சேர்ந்த ஆயிரம் சிறுமிகள் மதமாற்றத்திற்காக கடத்தப்படுவதாக ஒற்றுமை மற்றும் அமைதிக்கான இயக்கம் தெரிவித்துள்ளது.*

**<<<<>>>>**

*ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாராவில் 2 ஆயிரத்து 800 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட அணுமின் நிலைய கட்டுமானப் பணிகள் அடுத்த மாதம் தொடங்கப்படும் என்று தேசிய அனல்மின் கழகத்தின் தலைவர் திரு. குர்தீப் சிங் தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் மாநாடு ஒன்றில் பேசிய அவர், கனநீர் அணு உலைகள் மூலம் தலா 700 மெகாவாட் திறன் கொண்ட நான்கு பிரிவுகளாக இந்த அணுமின் நிலையம் செயல்படும் என்றார்.*

*அணுமின்சார உற்பத்தியை அதிகரிக்க NTPC நிறுவனம் முனைப்புடன் பணியாற்றி வருவதாகவும், 2047ஆம் ஆண்டுக்குள் 30 ஜிகாவாட் அளவிற்கு அணுமின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகவும் திரு. குர்தீப் சிங் தெரிவித்தார்.*

<<<<>>>>

*அசாமில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் வாயிலாக சுமார் 40 லட்சம் பெண்கள் வருவாய் ஈட்டும் தொழில்களை மேற்கொண்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. ஹிமந்தா பிஸ்வா ஷர்மா கூறியுள்ளார்.*

*குவாஹாத்தியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இவர்களில் சுமார் 8 லட்சம் பெண்கள் ஆண்டுக்கு ஒரு லட்சத்திற்கும் அதிகமாக வருவாய் ஈட்டி வருவதாக குறிப்பிட்டார்.*

*மகளிருக்கு நிதி அதிகாரம் அளிக்கும் வகையில் மாநில அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களின் வெற்றியே இதற்கு காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.*

*மகளிர் சுய உதவிக் குழுக்கள் மாநிலத்தின் கிராமப்புற மற்றும் நகர்ப்புற சமூகப் பொருளாதார நிலையை மாற்றியமைத்திருப்பதாகவும் திரு. ஹிமந்தா பிஸ்வா ஷர்மா கூறினார்.*

<<<<>>>>

*ஹிமாச்சலப்பிரதேசத்தில் உள்ள Shipki La கணவாய் வழியாக மீண்டும் எல்லைப்புற வர்த்தகத்தை மேற்கொள்ள இந்தியாவும், சீனாவும் முடிவு செய்துள்ளன.*

*ஏற்கனவே உத்தராகண்டின் Lipulekh மற்றும் சிக்கிமின் நாதுலா கணவாய்கள் வழியாக வணிகம் நடைபெற்று வரும் நிலையில் மூன்றாவதாக ஹிமாச்சலப்பிரதேசம் வழியாக வர்த்தகம் மேற்கொள்ளப்பட இருப்பதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.*

<<<<>>>>

*ஹரியானாவில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரமான குருஷேத்ரா தற்போது நாட்டிலேயே தூய்மையான மற்றும் எழில்மிகு நகரமாக உருவெடுத்துள்ளது என்று அம்மாநில முதலமைச்சர் திரு. நயாப் சிங் சைனி தெரிவித்துள்ளார்.*

*இதற்காக தூய்மை குருஷேத்ரா எனது குருஷேத்ரா எனப்படும் 11 வாரகால தூய்மை இயக்கம் நடைபெற்று வருவதாகவம் அவர் கூறியுள்ளார்.*

<<<<>>>>

உலக இளையோர் வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றது.

கனடாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் 18 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் Sharwari Shinde தங்கப்பதக்கம் வென்றார்.

கலப்புக் குழு பிரிவில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

இப்போட்டியில் இந்தியா 4 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<<<<>>>>

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டி பாரீசில் இன்று தொடங்குகிறது.

இந்தியா சார்பில் பி.வி. சிந்து, லக்ஷயா சென், சாத்விக் சாய்ராஜ், சிராக் ஷெட்டி, ருத்விகா ஷிவானி, ரோஹன் கபூர் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

கேமரூன் சர்வதேச பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் Dhruv Rawat - Suraj Goala இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 21-14, 21-13 என்ற செட் கணக்கில் ஜப்பானின் Akira Hanada - Shun Saito இணையை வென்றது.

<<<<>>>>

Europe Smash இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankur Bhatacharjee வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஸ்வீடனில் நடைபெற்ற இப்போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

<<<<>>>>

சென்னையில் நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையிலான தடகள சாம்பியன் போட்டியின் ஹெப்டத்லான் பிரிவில் தமிழகத்தின் தீபிகா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

<<<<The End>>>>